டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.9.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 074 - Madurai | Online Edition

# வானிலை, பருவநிலை முன்னறிவிப்பை மேம்படுத்த ரூ.2,000 கோடி மதிப்பில் முக்கிய முன்முயற்சி

புது தில்லி, செப்.13

புவி அறிவியல் அமைச்சகம் (MoES) புதுதில்லியில் உள்ள பிரித்வி பவனில் மின் மௌசம் எனப்படும் வானிலை இயக்கம் குறித்த தேசிய அளவிலான பத்திரிகை விளக்க நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலாளர் டாக்டர் எம்.ரவிச்சந்திரன், இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை இயக்குநர் டாக்டர் மிருதுஞ்சய் மொஹாபத்ரா, நடுத்தர நிலை வானிலை முன்னறிவிப்பு தேசிய மையத்தின் தலைவர் டாக்டர் வி.எஸ்.பிரசாத் ஆகியோர் ஊடகங்களிடம் பேசினர்.

இரண்டு ஆண்டுகளில் ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீட்டில், 2024 செப்டம்பர் 11 அன்று மத்திய அமைச்சரவை மின் மவுசம் எனப்படும் வானிலை இயக்கம் என்ற திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. இது மத்திய அரசின் லட்சிய முயற்சியாகும். இது இந்தியாவை வானிலை முன்னறிவிப்பில் நவீனமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு ஸள்ளது. இந்த பணி நாட்டின் வானிலை, பருவநிலை முன்னறி விப்பை வேகமாக மேம்படுத்தும் நடவடிக்கையாகும்.

முன்மொழியப்பட்ட வானிலை இயக்கத்தின் நோக்கங்களான, அதிநவீன வானிலை கண்காணிப்பு தொழில்நுட்பங்கள், அமைப்பு களை உருவாக்குதல், சிறந்த தற்காலிக, இடஞ்சார்ந்த வளிமண்டல கணிப்புகளை செயல்படுத்துதல், அடுத்த தலைமுறை ரேடார்கள், மேம்பட்ட கருவி பேலோடுகளுடன் செயற்கைக் கோள்களை செயல் படுத்துதல், வானிலை, பருவநிலை செயல் முறைகள், முன்கணிப்பு திறன்களின் புரிதலை மேம்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட புவி அமைப்பு மாதிரிகள், தரவு முறைகள் ஆகியவற்றை உருவாக்குதல், வானிலை மேலாண்மைக்கான தொழில்நுட்பங்களை உருவாக்கு ணதல், கடைசி மைல் இணைப்பிற்கான அதிநவீன பரவல் அமைப்பை உருவாக்குதல் ஆகும்.

# தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில்

## அகில இந்திய பயிர்ச்சிலந்திகள் ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் கூடும் ஐந்தாண்டிற்கு ஒரு முறையான கூட்டம்

கோயம்புத்தூர், செப்.13

தமிழ்நாடு வேளாண்மைபல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மைய பூச்சியியல் துறையில், அகில இந்திய பயிர்ச் சிலந்திகள் ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் கூடும் ஐந்தாண்டிற்கு ஒரு முறையான கூட்டம் (2012-2023) 11.9.24 அன்று நடைபெற்றது. இயக்குனர் பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் முனைவர் மா.சாந்தி, தொடக்க விழா பேருரை ஆற்றினார். மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிர் சிலந்திகள் ஆராய்ச்சியின் துவக்கம் பற்றியும் மற்றும் அதன் நோக்கங்கள் வளர்ந்து வரு ம் புதிய வகை பயிர் சிலந்திகள் அதன் தாக்கங்கள் குறித்தும் விரிவுரை ஆற்றினார்.



தோட்டக்கலை துறை முன்னாள் இணை இயக்குநர் முனைவர் நா.க.கிருஷ்ணகுமார், ஐந்தாண்டிற்கு ஒரு முறையான கூட்டத்தின் தலைவர், பயிர்களை தாக்கும் சிலந்தி வகைகளை பற்றியும், ஒருங்கிணைந்த பயிர் சிலந்திகள் மேலாண்மை, பயிர் சிலந்தி எதிர்ப்பு திறன் கண்காணிப்பு மற்றும் மேலாண்மை, அயல் நாட்டு பயிர் சிலந்தி வகைகளின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் பயிர் சிலந்தி வகைகள் கண்டறிதல், பயிர் சிலந்திகள் எண்ணிக்கை மற்றும் சேதாரத்தை கணக் கிடுதல் பற்றிய விவரங்களை விவசாயிகளுக்கு சென்றடையும் படி செயல்படுமாறு அறிவுரைத்தார். பயிர் சிலந்திகளினால் ஏற்படும் மகசூல் இழப்பு வருமான இழப்பாக முக்கியத்துவம்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

கொடுக்கப்பட வேண்டுமென்றார். மாணவர்கள் அகில் இந்திய அளவில் உயர்ந்த பதவிகளை அடைய முயற்சிக்க வேண்டும் என்று கூறினார்.

ஐந்தாண்டிற்கு ஒரு முறையான கூட்டத்தின் உறுப்பினர்கள் இயக்குநர் (NCIPM) முனைவர் சுபாஷ்சந்தர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக முன்னாள் ஆராய்ச்சி இயக் குனர் முனைவர் கு.ராமராஜு, PGS முன்னாள் தலைவர் முனைவர் ந.ஸ்ரீனிவாசா, UAS, பெங்களூரு, முனைவர் ரவீந்தர் சிங்க் சந்தல், (ஓய்வு) பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை (CSKHPKV), பலம்பூர், முனைவர் அர்ஜுன் சிங்க் பாலோடா, மண் கணுக்காலி பூச்சிகள் ஒருங்கிணைப்பாளர் மற்றும் முனைவர் சி.சின்னமா தேகௌடா பயிர் சிலந்திகள் ஒருங்கிணைப்பாளர் UAS, பெங்களூரு, உடன் கூட்டத்தில் பங்கேற்றனர். முனைவர் ம.முருகன், பேராசிரியர் மற்றும் தலைவர் பூச்சியியல் துறை வரவேற்புரை ஆற்றினார். பூச்சியியல் துறை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மண் கணுக்காலி பூச்சிகள் ஆராய்ச்சியாளர்கள், கரும்பு இனப் பெருக்க ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் உடன் பங்கேற் றனர். முனைவர் எ.சுமதி முடிவுரை ஆற்றி நன்றி நல்கினார்.

## விதைப்பண்ணை, இலவச மின் இணைப்பு குறித்து வேளாண்மை துணை இயக்குனர் ஆய்வு



திருச்சி, செப்.13

திருச்சி மாவட்டம், வையம்பட்டி வட்டாரம், லெட்சம்பட்டி கிராமத்தில் நிலக்கடலை விதை பண்ணை வயலினை வேளாண்மை துணை இயக்குனர் சரவணன் நேரில் ஆய்வு மேற்கொண்டார். மேலும் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்ட விவசாயிகளின் வயல்களையும் நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் முத்துசாமி, உதவி விதை அலுவலர் தாமஸ் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் உடனிருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# தென்னையில் காண்டமிருக வண்டை கட்டுபடுத்துவது குறித்து செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, செப்.13

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், ப.அம்மாபட்டி ஊராட்சியில் திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலை கழகத்தைச் சேர்ந்த இளநிலை வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் சீ.மோனிகா, பி.கீர்த்தனா, கொ.மோ. பிரேமலதா, ஜோ.அமலயோஷ்னி மற்றும் ஆ.இந்துமதி ஆகியோர் ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் அவ்வூரில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றன. தென்னையில் காண்டாமிருக வண்டை கட்டுபடுத் துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மண்பானையில் 5 லிட்டர் தண்ணீரில் 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கை கலந்து காண்டமிருக வண்டிற்கான பொறியை உருவாக்கி செயல்முறை விளக்கமளித்தனர். மேலும் மரத்திற்கு 1கிலோ கல் உப்பை தென்னங் குருத்துகளில் வைப்பதன் மூலம் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த முடியும் என்பதை எடுத்துரைத்தனர்.



# அன்னவாசல் வட்டார விவசாயிகள் வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு குறித்து கண்டுணர்வு பயணம்

புதுக்கோட்டை, செப்.13

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) 2024-25ம் ஆண்டு மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை திட்டத்தின் கீழ் அன்னவாசல் வட்டார விவசாயிகள் கண்டுணர்வு பயணமாக புதுக்கோட்டை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மண்டல ஆராய்ச்சி நிலையத்திற்கு 50 விவசாயிகளை அழைத்துச் செல்லப்பட்டது. இப்பயணத்திற்கு அன்னவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகரன் வழிகாட்டுதலின்படி பயணம் மேற்கொள்ளப்பட்டது.

பிறகு தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் புவராஜன், தலைமையுரையாற்றி இந்நிலையத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்து பயிற்சியை துவக்கிவைத்தார். அதனை தொடர்ந்து உதவிப்பேராசியர்கள் டாக்டர். சீபா, அவர்கள், ஆடுகளின் வகைகள், இனங்கள் தேர்வு, குடில் அமைத்தல் அதை பராமரிப்பு முறைகள், தீவனங்களின் முக்கியத்துவங்கள் தீவனமிடும் முறைகள், சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மைகள் குறித்தும், ஆடுகளில் ஏற்படும் நோய்கள் அறிகுறிகள் மற்றும் மேலாண்கள் குறித்தும் குடற்புழு பூச்சிகளின் வகைகள், உண்ணிகளை கட்டுபடுத்தும் முறைகள், ஆடுகளில் போடப்படும் தடுப்பூசிகளின் வகைகள் அதன் அட்டவணைகள், மாடு, கோழிகளுக்கு பற்றியும் விபரமாக விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். முன்னதாக அன்னவாசல் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சி.ரவிராஜன் வரவேற்றார்.

அதன் பின்பு இந்நிலையத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு குடில்கள், பசுந்தீவன வயல்வெளிகள், வென்பன்றிக் குடில்கள், நாட்டுக்கோழி, வான்கோழி, மாட்டுப் பண்ணைகள் பராமரிப்பு தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டு விளக்க மளித்தார்கள். இப்பயணத்தை அன்னவாசல் உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சக்திவேல் மற்றும் நவாப்ராஜா ஆகியோர் வழிநடத்தி விவசாயிகளை அழைத்து சென்று வந்தனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 13.09.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 32 | 36 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 52 | 56 | 57A | உருளை(ஊட்டி) | 50 | 56 |
| 2 | வெண்டை | 25 | 28 | 58 | மேரக்காய் | 18 | 22 |
| 3 | தக்காளி (நாடு) | 15 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 65 | 70 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 42 | 46 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 45 | 55 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 28 | 32 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காளிபிளவர் | 50 | 58 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 36 | 69 | இஞ்சி | 60 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 36 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 40 | 46 | 71 | பென்னி பீன்ஸ் | 65 | 70 |
| 16 | பெ.வெங்காயம் | 48 | 52 | 72 | குடமிளகாய் | 48 | 52 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | 110 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 56 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 30 | 34 | 71A | | | |
| 20 | தேங்காய் | 35 | 38 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 38 | 42 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 130 | 140 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 75 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 25 | 30 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 110 | 115 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 36 | 96 | நேந்திரன் | 40 | 45 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 30 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் மற்றும் வட்டார தொழில்நுட்ப குழு கூட்டம்



சிவகங்கை. செப்.13

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரம், வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024- 25 ஆம் ஆண்டிற்கான வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் மற்றும் வட்டார தொழில்நுட்ப குழு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 25 விவசாயிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்ட தலைவர் அண்ணாதுரை ஒன்றிய கவுன்சிலர் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ஜா.இரவிசங்கர் தலைமையேற்று வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பயிற்சிகள், செயல் விளக்கங்கள் பற்றி எடுத்து கூறினார்கள். தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் பற்றி தோட்டக்கலை அலுவலர் சுகன்யா எடுத்து கூறினார்கள். சுந்தரபாண்டியன் உதவி பொறியாளர் வேளாண் பொறியியல் துறை உள்ள திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். அய்யனார் கால்நடை ஆய்வாளர் கலந்து கொண்டு கால்நடை துறையில் இலவச நாட்டு கோழிகுஞ்சுகள் வழங்குவது மற்றும் கால்நடைகளுக்கு காப்பீடு செய்வது பற்றி எடுத்து கூறினார். வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனை துறையின் உதவி வேளாண்மை அலுவலர் ரம்யா, ஒழுங்குமுறை விற்பனை கூடம் நன்மைகள் மற்றும் நடைமுறைகள் பற்றி எடுத்து கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.அமிர்தலட்சுமி, 2024-2025 ஆம் ஆண்டிற்கான முதல் தவணையில் வழங்கப் பட்டுள்ள பயிற்சிகள், கண்டுணர்வு சுற்றுலா விவரத்தினை விவரித்து கூறினார். மேலும் துணை வேளாண்மை அலுவலர் சப்பாணிமுத்து வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுப்பொருள்கள் பற்றி எடுத்து கூறி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகளுக்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி பயிற்சி



விருதுநகர், செப்.13

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் 2024-25ம் நிதியாண்டிற்கு விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 40 கரும்பு விவசாயிகளுக்கு திருவில்லிபுத்தூர் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் 'நீடித்த நிலையான கரும்பு சாகுபடி' என்ற தலைப்பில் 12.6.24 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் திருவில்லிபுத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கு.தனலட்சுமி தலைமை யேற்று கரும்பு சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய முக்கிய தொழில் நுட்பங்களான ஒரு விதை பரு கரணை மூலம் நாற்றாங்கால் அமைத்து 25-30 நாட்கள் வயதான நாற்றுகளை எடுத்து நடவு செய்து 5x2 அடி இடைவெளியில் நடவு செய்து சொட்டு நீர் பாசன மூலம் உரமிட்டு, பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு செய்வதும் குறித்தும், ஊடுபயிர் சாகுபடி செய்து மண்வளம் மற்றும் மகசூல் பெறுவது குறித்தும், விரிவாக எடுத்துரைத்தார்.

வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் நடப்பாண்டு மானியத் திட்டங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் விரிவாக பேசினார். டாக்டர் சி.விஜயராகவன், உதவி பேராசிரியர் (பூச்சியியல் துறை) பருத்தி ஆராய்ச்சி நிலையம், கரும்பு சாகுபடி கடைபிடிக்க வேண்டிய முக்கிய தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து தரணி சர்க்கரை ஆலையின் உதவி மேலாளர் பாலசுப்பிரமணியன் கரும்பு விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணம் நீடித்த நிலையான கரும்பு சாகுபடியின் முக்கிய பயன்கள் மற்றும் தரணி சர்க்கரை ஆலை மூலம் வழங்கப்படும் மதிப்பீட்டு விபரம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து தரணி சர்க்கரை ஆலையின் கள அலுவலர் சுப்பிரமணியன், கரும்பு விவசாயிகளுக்கு எழுந்த சந்தேகங் களுக்கு விளக்கம் அளித்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பு.ஜோதிமஞ்சுளா, அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்து நன்றியுரை கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் த.மாரிமுத்து செய்திருந்தார்.



# அசோலா வளர்ப்பு முறை பற்றி செயல் விளக்கம்




திண்டுக்கல், செப்.13

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரமோகன் ஆலோசனைபடி அசோலா வளர்ப்பு முறை பற்றி செயல் விளக்கமாக செய்து முன்னோடி விவசாயி ஜான் பொன் மாந்துரை, முழு மானியத்தில் அசோலா பாய் வழங்கப்பட்டது.

அசோலா செய்முறையில் ஐந்து முதல் பத்து அடி நீளத்தில் உள்ள பாயினை தரையில் சமமான சிறு பள்ளமான இடத்தில் வைத்து பாயில் அரை அடிக்கும் குறைவாக தண்ணீர் ஊற்ற வேண்டும். இதில் ஒன்று அல்லது இரண்டு இன்ச் உயரம் தூசி மற்றும் கல்லிலா மண்ணை போட வேண்டும். மண்ணின் அளவில் மூன்றில் ஒரு பங்கு, போர் மணல் அல்லது சூப்பர் பாஸ்பேட்டை இதில் சேர்க்க வேண்டும். அதன் அளவுக்கு ஏற்றார் போல் சும்மா 3 அல்லது 6 கிலோ அளவு சாணியை தண்ணீரில் கரைத்து அசோலா பாயில் ஊற்ற வேண்டும். பின்பு அசோலாவை தண்ணீர் மேல் போட வேண்டும். இருபது நாளைக்கு ஒரு முறை தண்ணீரை மாற்ற வேண்டும். அசோலாவை நிழல் இருக்கும் இடத்தில் வளர்க்க வேண்டும்.

இதை கோழி தீவனமாகவும் மற்றும் பால் கறக்கும் மாட்டுக்கு ஒரு நாளைக்கு 300 கிராமிலிருந்து 500 கிராம் வரை கொடுப்பதால் அதிகமாக பால் கொடுக்கும் இந்த செயல் விளக்கத்தில் காந்தி கிராம வேளாண் கல்லூரி மாணவிகள் அபிதா, புவனேஸ்வரி, அக்ஷிதா, பவானி ஆகியோர் உடன் இருந்து உதவி செய்தனர்.

செயல் விளக்கத்திற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் அருகில் உள்ள விவசாயிகளுக்கும் சிறப்பாக செய்து காண்பித்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அக்ரி ஸ்டேக் (AGRI STACK) என்றால் என்ன? தெரியுமா?

எங்கும் டிஜிட்டல் மயம் நிகழ்ந்து வரும் இந்நிலையில் 'வேளாண்மை துறையிலும் டிஜிட்டல் மயமாகிறது. அந்த வகையில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தளம் தான் அக்ரி ஸ்டேக் (AGRI STACK) அதைபற்றி காண்போம்.

அக்ரி ஸ்டேக் என்பது திறந்த டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் விவசாயத்திற்கான தீர்வுகளை உருவாக்க அரசு, தொழில் மற்றும் ஸ்டார்ட் அப் ( START APP) பயன்படுத்த கூடிய கருவிகளின் தொகுப்பாக கருதப்படுகிறது. கணினி மொழியில் 'ஸ்டேக்' என்பது மென் பொருள் உள்கட்டமைப்பு, கருவிகள் பயன்பாடுகளின் தொகுப்பாக குறிக்கிறது. இது மென்பொருள் உருவாக்குநர்கள் உருவாக்க மற்றும் புதுமை களை பயன்படுத்த முடியும்.

**அக்ரி ஸ்டாக்-ன் செயல்பாடுகள்?**

400 மாவட்டங்களில் டிஜிட்டல் மயமாக்கப்படும் டிஜிட்டல் முறையில் பயிர் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படும் என அறிக்கை தரப்பட்டுள்ளன. அடுத்த 3 ஆண்டுகளில் 6 கோடி விவசாயிகளின் நிலங்கள் மற்றும் அது தொடர்பான தகவல்கள் டிஜிட்டல் மயமாக்கப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

**முதற்கட்டமாக எந்த எந்த மாநிலங்களில் செயல் படுத்தப்படு கிறது தெரியுமா?**

முதற்கட்டமாக உ.பி, மகாராஷ்டிரா மாநிலங்களில், செயல் படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற மாநிலங்களுக்கு விரிவு படுத்தப்படும்.

அக்ரி ஸ்டாக் ( AGRI STACK) என்பது விவசாயிகளின் விபரங்கள், நில ஆவணங்கள், காப்பீடு கடன் மற்றும் பயிர் சாகுபடி மற்றும் அவர்களின் வருமானம் போன்ற அனைத் தையும் கொண்டிருக்கும் சேமிப்பு பெட்டகமாக இருக்கும்.

**தரவுகள் எப்படி கிடைக்கிறது தெரியுமா?**

அக்ரி ஸ்டாக் தேவைப்படும் தரவுகள் அனைத்தும் இஸ்ரோ' வழங்க கூடிய செயற்கை கோள் தரவுகள், செயற்கை நுண்ணறிவு

இயந்திர கற்றல் புவியிடம் காலநிலை தகவல்கள் (GEOSPATIAL DATA) மற்றும் தொழில்நுட்ப காட்சியளிப்பு (VISUAL ANALYTICS) போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களின் மூலமாக சேமிக்கப்படும்.

அத்துடன் விவசாயிகள், அரசாங்க துறைகள், வேளாண் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் போன்றவைகளை ஒருங்கிணைக்கும் ஒரு டிஜிட்டல் தளமாகவும் அக்ரி ஸ்டாக் உள்ளது.

**அக்ரி ஸ்டாக் தேவையா?**

1) தற்போதைய நிலையில் விவசாயிகளின் அடையாள ஆவணங்கள் மற்றும் நிலம் தொடர்பான தகவல்கள் அனைத்தும் வெவ்வேறு துறைகளிடம் உள்ளன. இதனால் குறிப்பிட்ட மானியம் / இன்ன பிற சலுகைகள் வழங்குவதில், பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அத்தகைய பிரச்சினைகளை போக்கி, விவசாயிகளின் தகவல்கள் அனைத்தும் ஒரே தளத்தில் இயங்கும் வகையில் அக்ரி ஸ்டாக் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2) இதன் வழியாக விவசாயிகளுக்கு போதிய அளவிலான பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தி மேம்படுத்தும் வழிமுறைகள், தக்க சமயத்துல முடிவு எடுக்க ஆலோசனைகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் வகையிலான தகவல்கள் உள்ளடக்கிய தளமாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது. தனியார் நிறுவனங்களின், உதவியுடன், அக்ரி ஸ்டாக் தளத்தை மேம் படுத்த எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியுள்ளது.

அக்ரி ஸ்டாக் என்பது ஆதாரை விட முக்கியமான டிஜிட்டல் பணியாக இருக்கலாம். இது இந்திய விவசாயத்தை மேம்படுத்தி முறைபடுத்தும். இது ஒவ்வொரு மாநில விவசாயிகளுக்கும்

ஒருங்கிணைந்த சேவை இடை முகம் (UFSI) எண் வழங்குவதை உள்ளடக்கியது.

மொத்தத்தில் இனிவரும் காலம் வேளாண்மைக்கும் டிஜிட்டல் காலம் தான் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மண் புழுக்களை பாதிக்கும் பயிர்ச் சாகுபடி முறைகள் மற்றும் இரசாயன உரங்கள்!

மண்ணில் கண்ணுக்கு புலப்படக்கூடிய பல வகையான மட்குண்ணிகள் இருந்தாலும் கழிவுப் பொருட்களை மக்க வைப்பதில் மண்புழுக்களே பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால் தட்ப வெப்ப நிலை, இயற்கை எதிரிகள், மண்ணின் குணங்கள், சாகுபடி முறைகள், இரசாயன உரங்கள், ஆலைக் கழிவுகள், காடுகள் அழிப்பு, பூச்சிக்கொல்லிகள், பூஞ்சாணக் கொல்லிகள் மற்றும் கலைக் கொல்லிகள் போன்ற பல காரணிகள் அவற்றை பாதிக்கின்றன.

## பயிர்ச் சாகுபடி முறைகள்

நிலத்தை இயந்திரங்கள் கொண்டு உழுது சீர்படுத்தும் போது நிலத்தின் மேற்புறத்தில் வாழும் மண் புழுக்களில் பெரும் பாலானவை வெளிக்கொண்டு வரப்படுவதால் காகம், மைனா, குருவி போன்ற பறவைகளால் எளிதில் எடுத்துச் சென்று உணவாக உட்கொள்ளப்படுகின்றன.



உழுவு செய்வதன் மூலம் 5 முதல் 10 விழுக்காடு மண்புழுக்கள் மண்ணின் மேற்புறத்திற்கு கொண்டு வரப்படுவதாகவும், 25 விழுக்காடு மண்புழுக்கள் மிகவும் காயப்படுத்தப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், மிகவும் பலுவான இயந்திரங்கள் கொண்டு உழும் பொழுது மண்ணின் இடை கீழ் பகுதிகளில் உள்ள மண்புழுக்கள் சக்கரங்களால் அதிகமாக காயப்படுத்தபடுவதாகவும் கண்டறி யப்பட்டுள்ளது.

**இரசாயன உரங்கள்**

அளவிற்கு அதிகமான இரசாயன உரங்களைப் பயிருக்கு இடும் பொழுது அவற்றின் நச்சுகள் மண்ணில் தங்கி விடு கின்றன. இந்த நச்சுகள் மண்புழுக்களின் உடலை வெகுவாகப் பாதிப்பதால் மண்புழுக்கள் அவ்விடத்தை விட்டு சென்று




விடுகின்றன. இவற்றின் நச்சுத்தன்மை அதிகமாக இருக்கும் பட்சத்தில் புழுக்கள் இறக்கவும் நேரிடுகின்றது.

தழைச்சத்து உரங்களான அம்மோனியம் சல்பேட் என்ற உரத்தை அதிகளவு இடுவதால் மண்ணில் அமில நிலை உருவாகி மண்புழுக்களைப் பாதிக்கின்றன.

மாட்டுச் சாணம் மண்புழுக்களுக்கு உகந்த உணவாக இருந்தாலும், அவற்றை புதியதாகவோ அல்லது கரைசலாக இடும்போது அதிகளவு அம்மோனியா வாயு வெளிப்படுவதுடன் கரிம உப்புகளும் உருவாகி மண்புழுக்களுக்கு பெரும் கெடுதல் விளைவிக்கின்றன.

கோழி எரு, குதிரை எரு போன்ற கழிவுகளை உடனுக்குடன் இடும்பொழுது அதிகளவு வெப்பம் வெளிப்படுவதாலும் மண்புழுக்கள் இறக்க நேரிடுகின்றது என சேலம் மாவட்டம் காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் தெரிவித்தார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# நெல் மற்றும் நிலக்கடலை சாகுபடிக்கான ஆயத்த பயிற்சி




விருதுநகர், செப்.13

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டாரத்திலுள்ள முடுக்கன் குளம் கிராமத்தில் சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் கம்பெனியின் முடுக்கன் குளம் கிராம உற்பத்தியாளர் குழுவினருக்கு CCD தொண்டு நிறுவனமும் ரிலையன்ஸ் பவுண்டேசன் இணைந்து நடத்திய பயிற்சியில் மாவட்ட திட்ட மேலாளர் ஸ்ரீ கிருபா தனது தலைமை உரையில், நமது மாவட்டத்தில் நெல் மக்கா சோளம் மற்றும் நிலக்கடலைக்கான டிஜிட்டல் பண்ணை பள்ளி நடத்தி வருகிறோம். அதில் விதைப்பு முதல் விற்பனை வரையிலான தகவல் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு நேரடியாகவும், வாட்சாப் மற்றும் தொலைபேசி வாயிலாக ஆடியோ கான்பரன்ஸ் நடத்தி வருவதாக கூறினார்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் கம்பெனியின் சி.இ.ஓ பார்த்த சாரதி பேசுகையில், இந்த கம்பெனியானது நரிக்குடி, காரியா பட்டி வட்டாரத்திலுள்ள விவசாயிகளின் நலனுக்காக செயல்படுகிறது. தங்களுக்கு தேவையான அனைத்து இடுபொருட்களும் கம்பெனி வளாகத்தில் உள்ள அக்ரி கிளீனிக்கில் பெற்று கொள்ளலாம். ஸீஸீம் நிறுவன செயல் நிர்வாகி பத்மாவதி அவர்களின் ஆலோசனை படியும் திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோவின் வழிகாட்டுதலின் பேரில் சிறப்பாக இந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் செயல்படுவதாக கூறினார்.

இந்த பயிற்சியில் வேளாண் வல்லுநர் சந்திரசேகரன் தனது உரையில், நெல் சாகுபடியில் கூடுதலான மகசூல் பெறும் பத்து தொழில்நுட்பங்களை எடுத்துக்கூறினார். தரமான சான்று பெற்ற விதைத்தேர்வு, விதை நேர்த்தி முறைகளை பற்றியும் நாற்றாங்கால் தயாரிப்பு, நடவு வயல் தயாரிப்பு, பற்றியும் விதை அமிர்தம் கொண்டு

விதை நேர்த்தி செய்து செயல்விளக்கமாக செய்து காட்டப்பட்டது. ஒரு கிலோ விதைக்கு 25.மி.லி வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து அரை மணி நேரம் உலர வைத்து விதைக்க கூறினார். மேலும் நிலக்கடலை விதைக்கு விதைநேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டி.விரிடி கலந்து 24 மணி நேரம் கழித்து விதைப்பதால், வேர் அழுகல், வேர் வாடல் போன்ற நோய்கள் மற்றும் விதை மூலமாக பரவும் நோய்கள் தடுக்கப்படும். நிலக்கடலை பயிர்களில் செய்ய வேண்டிய உத்திகள் பற்றி விளக்கமாக கூறப்பட்டது. இந்த நிகழ்வில் ளீளீம் பணியாளர் தமிழ் நேசன் கண்ணன் பரதன் மற்றும் ரிலையன்ஸ் கள பணியாளர் வேம்புலு உள்பட கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பாக அமைய உதவி புரிந்தனர். குழு உறுப்பினர்களின் சாகுபடி சந்தேகம் குறித்து விளக்கப்பட்டது.



# உழவர் பயிற்சி நிலையம் மூலம் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி



நாமக்கல், செப்.13

நாமக்கல் மாவட்டம், எலச்சி பாளையம் வட்டாரம் 67 கவுண்டம்பாளையம் கிராமத்தில் உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் கோவிந்தசாமி, வேளாண்மை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயமாலா முன்னிலை வகித்து வேளாண்மை சார்ந்த மத்திய, மாநில திட்டங்கள், பாரத பிரதமரின் கௌரவ நிதி திட்டம் பற்றி கூறினார்.

நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் சுதாகர், உழவர் பயிற்சி நிலையம் செயல்பாடு , அட்மா திட்டம் மற்றும் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் உயிர் உரங்கள் உயிர் பூஞ்சான கொல்லி மூலம் விதை நேர்த்தி செய்தல் பயிர் சுழற்சி ஊடுபயிர் உரம் மேலாண்மை உளவியல் தொழில்நுட்பம் மற்றும் இயற்கை முறையில் மயில் விரட்டி பற்றி கூறினார் உதவி வேளாண்மை அலுவலர் சக்திவேல், வேளாண்மை விரிவாக்க மையத்தில் வைக்கப்பட்டுள்ள இடுபொருட்கள் பற்றி கூறினார். வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை உதவி வேளாண்மை அலுவலர் பாலலிங்கேஸ்வரன் கலந்து கொண்டு உழவர் சந்தைக்கு அட்டை வழங்குதல், சந்தைப்படுத்துதல், குடோன் அமைத்தல், போன்ற ட்டங்களை பற்றி எடுத்துக் கூறினார். தோட்டக்கலை உதவி அலுவலர் நந்தினி, கலந்து கொண்டு சொட்டு நீர்ப்பாசனம், இயற்கை விவசாயம், நடப்பாண்டு திட்டங்களைப் பற்றி விரிவாக எடுத்து கூறினார். வேளாண்மை உதவி பொறியாளர் தீபா, வாடகை எந்திரம், மின் மோட்டார், சோலார் திட்டங்கள், இயந்திரங்களை பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். வனத்துறை அலுவலர் ராஜேஷ், தேக்கு, மகோகணி போன்ற மரங்களை தாங்களே நடவு செய்வது பற்றி எடுத்துக் கூறினார். பட்டு வளர்ச்சி ஆய்வாளர் செந்தமிழ்செல்வி, கலந்துகொண்டு மாற்று நடவு, கொட்டகை அமைத்தல், தளவாடங்கள், போன்ற

திட்டங்களைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். கால்நடை மருத்துவர் சுதா, கோமாரி நோய், மற்றும் நடப்பு திட்டங்களை பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். உழவன் செயலியின் பயன்பாடு மற்றும் பதிவிறக்கம் பற்றி வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர் விளக்கி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை உதவி வேளாண்மை அலுவலர் சக்திவேல் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்செல்வன் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

# இணைய தளத்தில் வேளாண் பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்து வேளாண் மாணவர்கள் விழிப்புணர்வு



விருதுநகர், செப்.13

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண் துறை மாணவர்கள் ஆகாஷ், எழில் ஆகாஷ், ஆனந்த முருகன், ஸ்ரீதர் நவீன், முகைதீன் பைசல், பாலசுப்ரமணியன், ஆகாஷ் குபேந்திரன் மற்றும் சந்தோஷ் சிவன் வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிராம தங்கல் திட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தங்கி விவசாயிகளை நேரில் சந்தித்து ஆலோசனைகளையும் செயல்முறை விளக்கமும் விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர். இம்மாணவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி வேளாண்மை அலுவலர் குருலட்சுமி, பாட ஆசிரியர் டாக்டர். ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் சதீஷ் குமார் அறிவுரையின் படி, மடவர்வாலாகத்தில் உள்ள வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடைபெற்ற வட்டார தொழில் நுட்ப குழு மற்றும் வட்டார விவசாய ஆலோசனைக்குழு கூட்டத்தில் பங்கேற்றனர். அதில் இம்மாணவர்கள் கலந்து கொண்டு இணையதளத்தில் வேளாண் பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தினர். அப்பொழுது இடைத்தரகர்களின் பங்களிப்பின்றி எவ்வாறு இணையத்தளத்தில் சந்தைப் படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# ஆர்யா திட்டத்தின் கீழ்–வாழையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரித்தல் குறித்த திறன் மேம்பாட்டு செயல்விளக்கப் பயிற்சி



கன்னியாகுமரி, செப்.13

கன்னியாகுமாரி மாவட்டம், திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையம் ஆர்யா திட்டத்தின் கீழ் -வாழையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரித்தல் குறித்த ஐந்து நாள் திறன் மேம்பாட்டு செயல்விளக்கப் பயிற்சி' 9.9.24 முதல் 13.9.24 வரை நடைபெற்றது.

9.9.24 அன்று காலை 10.30 மணியளவில் பயிற்சியின் துவக்கவிழா ஆரம்பிக்கப்பட்டு இச்செயல் விளக்கபயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப் பாளர் பேராசிரியர் முனைவர் சா.சுரேஷ் துவக்கவுரையாற்றி திறன் மேம்பாட்டு பயிற்சியின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். முனைவர் அ.செல்வராணி, உதவிப் பேரா சிரியர் (உழவியல்), வாழை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி உரையாற்றினார். 10.9.24, 11.9.24) அன்று முறையே முனைவர் ஜெ.செல்வி, உதவிப் பேராசிரியர் (உணவியல்) வாழையின் முக்கியத்துவம், சத்துக்கள், மருத்துவ பயன்கள் பற்றியும், நேந்திரன் வாழையிலிருந்து ஜாம், வாழைப்பூ தொக்கு, பழபானம் (ஸ்குவாஷ்), தேன் வாழை பற்றி செயல் விளக்கத்துடன் எடுத்துரைத்தார். நான்காம் நாளான 12.9.24ல் வாழைகாய் மாவு மற்றும் சிப்ஸ் தயாரித்தல் கூடம் முத்தல குறிச்சியில் உள்ள நாஞ்சில் நாடு வாழை மற்றும் இதர பயிர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை கண்டுணர்வு சுற்றுலா வில் வாழைக்காய் பதப்படுத்தும், உலர்த்தும் தொழில் நுட்பங் கள் மற்றும் வாழைகாய் மாவு மற்றும் சிப்ஸ் தயாரித்தல் பற்றி தெரிந்து கொண்டர்கள். ஐந்தாம் நாள் (13.9.24) அன்று முனைவர் ஜெ.செல்வி, உதவிப் பேராசிரியர் (உணவியல்) வாழையிலிருந்து புரதச்சத்து மற்றும் இரும்புச்சத்து நிறைந்த சத்துமாவு மற்றும் பழம்பச்சி பற்றி செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியின் நிறைவு விழாவில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சிறப்புரையாற்றி பயிற்சி யாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. பயிற்சியில் 30 பண்ணை மகளிர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டு வாழை மாவிலிருந்து புரதச்சத்து நிறைந்த குழந்தை களுக்கான இணை உணவு, வாழை மாவு லட்டு மற்றும் நேந்திரன் வாழைப்பழ அத்தி, நேந்திரன் வாழையிலிருந்து ஜாம், வாழைப்பூ தொக்கு, பழபானம்) பற்றி தெரிந்து கொண்டு பயனடைந்தார்கள்.



# இரசாயனம் இல்லாமல் நோய் மற்றும் பூச்சிகளை கட்டுபடுத்துவது சாத்தியமா?

## வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்



திண்டுக்கல், செப்.12

காந்திகிராம கிராமிய பல்கலை கழகத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளங்கலை வேளாண்மை நான்காம் ஆண்டு படிக்கும் மாணவிகள் விசாலினி, விக்னேஷ்வரி, அபிநயா, கயல்விழி, ரேணுகாதேவி ஆகிய நாங்கள் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தரமாரி (வேளாண்மை விரிவாக்கம்) தலைமையில் மற்றும் பிரியங்கா (வேளாண்மை விரிவாக்கம்) வழிகாட்டுதலில் வேளாண் கிராமபுற அனுபவ பணித் திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் உள்ள பூனாம்பாளையம் கிராமத்தில் பயிற்சி பெற்று வருகிறோம்.



பூனாம்பாளையம் கிராமத்தில் விவசாயிகள் அதிகமாக செயற்கையான உரங்கள், பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துகிறார்கள். இயற்கையான முறையில் விவசாயம் செய்யலாம் என்ற விழிப்புணர்வு இல்லை என்பதை உணர்ந்தோம். இந்த பிரச்சனை இந்த கிராமத்தில் மட்டும் இல்லை, முக்கால்வாசி கிராமங்கள் இதே நிலைமையில் தான் உள்ளது. எதற்காக விவசாயிகள் செயற்கையாக உரங்கள், பூச்சிக்கொல்லி, பூஞ்சானகொல்லிகள் எல்லாம் பயன்படுகிறார்கள் சுலமாக பூச்சி, நோய் தாக்காமல் மகசூல் அதிகமாக பெறலாம் என்று தான். இந்த இரசாயனங்களை ஒரு முறை பயன்படுத்தினால் இந்த நோய்கள், பூச்சிகள் கட்டுபாட்டுக்கு வருமா? என்ற கேள்விக்கு பதில் ‘இல்லை‘. அப்போது விவசாயிகள் பூச்சி, நோய் தாக்காமல் இருப்பதற்காக அதிகமான இராசயன மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இதனால் செடிகளில் இரசாயன நஞ்சு அதிகமாகும், நாம் சாப்பிடும் தானியங்கள், பழங்கள், காய்கறிகளிலும் நச்சுத்தன்மை இருக்கும், மண்ணின் வளமும் குறையும். விவசாயிகளுக்கு இந்த பூச்சிக்கொல்லி, உரங்கள் பயன்படுதுவதால் வரும் பின் விளைவுகள் அனைத்தும் தெரியும். ஆனால் வேறு வழியின்றி தான் இட்ட முதலீட்டை திரும்ப பெற இதனை பயன்படுத்துகின்றனர். விவசாயிகளுக்கு பழையபடி

இரசாயத்தைப் பயன்படுத்தாமல் விவசாயம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஒரு ஓரத்தில் இருக்கிறது. அவர்கள் இயற்கையான முறையில் விவசாயம் செய்யாமல் இருப் பதற்கு காரணம் பயம் தான், ஈட்டிய முதலீட்டை எடுக்க முடியுமா?, மகசூல் வருமா? இரசாயனம் இல்லாமல் நோய் மற்றும் பூச்சிகளை கட்டுபடுத்துவது சாத்தியமா?

இந்த கேள்விகளுக்கு பதில் சொல்லும் வகையில் நாங்கள் சில செயல்விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காட்டினோம்.

**முட்டை ஒட்டுண்ணி**

முட்டை ஒட்டுண்ணி என்பது பயிர், செடிகளில் பிரச்சனை ஏற்படுத்தும் பூச்சிகளை அதனுடைய முட்டை வடிவிலே தாக்கி, அந்த பூச்சி வெளிவரும் முன்னரே முட்டையிலேயே கொல்கிறது. செடிகளில் தீங்கு ஏற்படுத்தும் பூச்சிகளின் பாதிப்பு குறையும். முட்டை ஒட்டுண்ணிகள் குறிப்பாக டிரைக்கோகிரம்மா வகையை சேர்ந்த ஒட்டுண்ணி பூச்சிகள் பரவலாக சேதத்தை ஏற்படுத்தும் பூச்சிகளை முட்டையிலே கொல்லும். இது அட்டை வடிவில் கிடைக்கிறது.


நாங்கள் பூனாம்பாளையம் கிராமத்தில் இந்த செயல்விளக்கம் செய்து காட்டினோம். பூனாம்பாளையம் கிராமத்தில் மானாவாரி நிலங்கள் அதிகமாக உள்ளது. இங்கு கத்திரிக்காய், இதர காய் பயிர்கள், மக்காச்சோளம், சோளம், வெங்காயம், நெல் இன்னும் பல பயிர்கள் பயிரிடுகின்றன. கத்திரிக்காயில் சொத்தைக்காய் அதிகமாக வருவதற்கு கத்திரிக்காயில் தண்டுமற்றும் காய் துளைப்பான் தான் காரணம். இதனால் மகசூல் மற்றும் கத்திரிக் காயின் மதிப்பு குறைகிறது. தண்டு மற்றும் காய்துளைப்பான் கட்டுபடுத்துவதற்காக டிரைக்கோகிரம்மா அட்டை பயன்படுத்தி செயல்விளக்கம் அளித்தோம். டிரைகோகிரம்மா என்பது ஒரு முட்டை ஒட்டுண்ணி. டிரைக்கோ அட்டையில் முட்டைபருவத்தில் இருக்கும் டிரைக்கோகிரம்மா அதிலிருந்து பூச்சியாக வெளிவந்து தண்டு மற்றும் காய் துளைப்பானின் முட்டையை தாக்குகிறது. இதனால் முட்டையிலிருந்து புழுவாக வந்து கத்திரிக்காயில் சேதம் ஏற்படுவதை தவிர்கலாம்மற்றும் மகசூலை அதிகரிக்கலாம். கத்திரிக்காய் மட்டும் இல்லாமல் மக்காசோளம், சோளம், நெல், காய்கறிகள் மற்றும் புழுக்கள் தாக்கும் அனைத்து பயிர்ளுக்கும் பயன்படுத்தலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

### டிரைக்கோ அட்டை செய்முறை விளக்கம்

### டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி (Trichogramma) பயன்படுத்தும் முறை

- டிரைக்கோகிரம்மா அட்டையை 5 வரிகளாக கிழித்து, ஒரு வரியை இலை கீழ் வைத்து ஸ்டேப்லர் அடிக்க வேண்டும்.
- இதே முறையில் வயல் முழுவதும் டிரைக்கோ அட்டையை இடைவெளை விட்டு பரவலாக நிலத்தில் வைக்க வேண்டும். வயல்களின் ஓரங்களில் அட்டையை வைக்க கூடாது.
- இதை வைத்த பிறகு பூச்சிகொல்லியை 15 நாட்கள் பயன்படுத்த கூடாது, மீறி பயன்படுத்தினால் டிரைக்கோகிரம்மா இறந்து விடும்.
- 15 நாட்களுக்கு ஒரு முறை மீண்டும் டிரைக்கோகிரம்மாவை பயன்படுத்த வேண்டும்.



### மஞ்சள் ஒட்டும் பொறி

இலை மற்றும் காய் பழங்களை கடித்து சாப்பிடும் புழுக்களை கட்டுப்படுதத்தும் முட்டை ஒட்டுண்ணி பற்றிய செயல்விளக்கம் பார்தோம். இப்போது இலை மற்றும் காய் பழங்களை ஒட்டி

உறிஞ்சி சாப்பிடும் இலைப்பேண், அந்துப்பூச்சி, வெள்ளை ஈ போன்ற பூச்சிகளைக் குறைக்க செயல்விளக்கம் செய்து காட்டினோம். அதுதான் மஞ்சள் ஒட்டு ம்பொறி. இந்த மஞ்சள் ஒட்டும் பொறிகளையை விவசாயிகள் முன்நிலையில் எப்படி செய்வது என்று செய்து காட்டினோம். மஞ்சள் அட்டையை செவ்வகமாக அல்லது சதுரமாக வெட்டி அதில் கிரீஸ்/ விளக்கெண்ணை+வாசலின்ஒருமெல்லிய அடுக்காக தடவ வேண்டும். பின்னர்அதை செடியின் அளவிற்கு ஏற்ப ஒரு குச்சில் கட்டி வயல்களுக்கு நடுவில் வைக்க வேண்டும். வெண்டைக்காய் தோட்டத்தில்ஏக்கருக்கு 4 என்ற விகிதம் இதை வைத்தோம்.

இது பிரகாசமான மஞ்சள் நிறத்தில் இருப்பதால் பூச்சிகளை தன்னை நோக்கி ஈர்க்கிறது, அவை நெருங்கியவுடன் காகிதத்தின் மேற்பரப்பில் உள்ள பசையில் ஒட்டிக்கொள்ளும்.

இது இரசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைக்கிறது. இதனை ஒரு ஏக்கருக்கு நான்கு முதல் ஆறு வரை வைக்கலாம். செடிகளின் உயரத்திற்கு ஏற்ப இந்தமஞ்சள் ஒட்டும் பொறியின் உயரத்தை மாற்ற வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை இதை மாற்ற வேண்டும்.

## உயிர் பூஞ்சான கொல்லி



பூஞ்சான நோய்களை கட்டுப்படுத்து வதற்காக உயிர் பூஞ்சான கொல்லியான டிரைக்கொடெர்மா விரிடி (T.viride) பயன் படுத்தி மக்காசோளத்தில் விதை நேர்த்தி செயல் விளக்கம் செய்தோம். இந்த உயிர் பூஞ்சான கொல்லி செடிகளில் நோய்களை ஏற்படுத்தும் பூஞ்சைகளோடு போட்டியிட்டு கொல்கிறது. திரவ வகை டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு லிட்டருக்கு 10 மி.லி என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து பயன் பெறலாம். இதனால் வேர் அழுகல் மற்றும் இதர பூஞ்சைநோய் தாக்கத்தலிருந்து பயிரைப் பாதுகாக்கலாம். இதுவே பொடி வடிவில் இருக்கும் டி.விரிடி 4 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து விதைகளை அதில் இட்டு பி ன்னர் நிழலில் உலர வைத்து விதைகளை நடலாம்.



இதை விதை நேர்த்தி மட்டும் இல்லாமல் தெளிப்பானை பயன்டுத்தி செடிகளில் 10 மி.லி/லி என்ற அளவில் தெளிக்கலாம். இதன் மூலம் இலைகளைத் தாக்கும் பூஞ்சை நோய்களை குறைக்கலாம்.



## மூலிகை கரைசல்

அடுத்து, நாங்கள், பூக்கள் செடியில் தங்க மற்றும் நல்ல மகசூல் வர மூலிகை கரைசல் செய்து காட்டினோம்.

## மூலிகைக் கரைசல் செய்முறை



### தேவையான பொருட்கள்

- 2 பனம் பழம்
- 10 குமுட்டுக்காய்
- 1 லிட்டர் பால்
- 6-7 லிட்டர் கோமியம்
- 1/2 கிலோ வெள்ளம்
- 1 கற்றாழை
- 1 கிலோ மாட்டுச்சாணம்
- 1 கிலோ வேப்பம் இலை அல்லது விதை





பனம்பழம், குமுட்டுக்காய், கற்றாழை ஆகியவற்றை நசிக்கி ஒரு வாளியில் போட வேண்டும். பின்னர், வெள்ளத்தை தட்டி , வேப்ப இலையை வெட்டி அதில் போட வேண்டும். பால், கோமியம், மாட்டுச்சாணம் இவற்றையை கலக்கி மூடி வைக்க வேண்டும். ஏழு நாட்களுக்கு தினமும் ஒரு முறை கலக்கிவிட வேண்டும். 7 ஆவது நாள் கரைசலை வடிகட்டி வைக்கவும்.



**பயன்படுத்தும் முறை**

முக்கால் லிட்டர் கரைசலை தெளிப்பானில் ( 16 லிட்டர் sprayer) ஊற்றி செடிகளுக்குத் தெளிக்க வேண்டும். இதனைப் பூப்பூத்தப் பிறகு தெளிக்கத் தொடங்கி 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும். இந்த அளவை இரண்டு ஏக்கர் நிலத்திலுள்ள செடிகளுக்குப் பயன்படுத்தலாம். இதனால் பூக்கள் செடியில் தங்கி அதிக மகசூலைக் கொடுக்கும். இதனை கத்திரி, வெண்டை, புடலங்காய், சுரைக்காய் மற்றும் இதர காய்கறி செடிகளுக்கு பயன்படுத்தலாம்.



இவ்வாறாக பூச்சிகளை, நோய்களை கட்டுபடுத்த, நல்ல மகசூல் பெற இவை அனைத்தும் பயன்படுத்தலாம் மற்றும் இயற்கை விவசாயத்தை இவை ஊக்குவிப்ப தோடு இரசாயன பூச்சிமற்றும் பூஞ்சான கொல்லிகளை பயன்படுத்தாமல் ஆரோக் கியமான வாழ்விற்கு வழிகாட்டுகிறது.



பின் குறிப்பு: டிரைக்கொ அட்டை, டிரைக் கொடெர்மா விரிடி இவற்றை இலவசமாக பெற மத்திய அரசின் சி.பி.எம்.ஐ.சி (Central Integrated Pest and Disease Management) காஜாநகர் திருச்சியில் உள்ளது. விவசாயிகள் தங்கள் ஆதார்அட்டையினை ஜெராக்ஸ் எடுத்து சென்று இலவசமாக இவற்றை பெற்று கொள்ளலாம்.



கட்டுரையாளர் : **செ.விசாலினி, இளங்கலை வேளாண்மை (நான்காம் ஆண்டு), வேளாண்மை மற்றும் கால்நடை பள்ளி, காந்தி கிராம கிராமிய பல்கலைகழகம், காந்திகிராமம், திண்டுக்கல்.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.